செய்தி வெளியீடு எண் : 594 நாள்: 12.04.2022

# தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தேசிய அளவில் பெற்ற விருதுகள்

ஒன்றிய பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் எரிபொருள் சேமிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (PCRA) ஆண்டுதோறும் டீசல் பயன்பாட்டில் ஒரு லிட்டருக்கு அதிகபட்ச கிலோ மீட்டர் இயக்கத்திற்காக பணமுடிப்பு மற்றும் கேடயம், விருதாக அகில இந்திய அளவில், வழங்கி வருகிறது. அகில இந்திய அளவில் வழங்கப்படும் எரிபொருள் (டீசல்) பயன்பாட்டில் 1 லிட்டருக்கு அதிகமான கிலோ மீட்டர் இயக்கத்திற்காக, இந்திய அளவில் வழங்கப்படும் 6 விருதுகளில், 3 விருதுகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் பெற்றுள்ளன. விருதுகளைப் பெற்ற கும்பகோணம், சேலம், கோயம்புத்தூர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் மேலாண்மை இயக்குநர்கள் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களை இன்று (12.04.2022) சந்தித்து, விருதுகள் மற்றும் கேடயங்களை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் விருதுபெற்ற மேலாண் இயக்குநர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்து, இது போன்ற விருதுகளை வருங்காலங்களில் பெற்றிட தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் முனைப்புடன் செயலாற்ற கேட்டுக்கொண்டார். இந்நிகழ்வின்போது போக்குவரத்துத் துறையின் முதன்மைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார்.

விருதுகள் விவரம்:

1. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம் எரிபொருள் (டீசல்) பயன்பாட்டில் லிட்டர் ஒன்றிற்கு

அதிகபட்ச கிலோ மீட்டர் இயக்கத்திற்காக தேசிய அளவில் முதல் சிறந்த போக்குவரத்துக் கழகமாக தேர்வு செய்யப்பட்டு, மேற்கண்ட சாதனையை அங்கீகரிப்பதற்காக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணத்திற்கு ரூபாய் 3 லட்சம் பரிசு மற்றும் கேடயம் விருதாக வழங்கப்பட்டது.

2. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம் எரிபொருள் (டீசல்) பயன்பாட்டிற்காக லிட்டர் ஒன்றிற்கு அதிகபட்ச கிலோ மீட்டர் இயக்கத்தை (5.0 கி.மீட்டருக்கு மேல்) எட்டியதற்காக, தேசிய அளவில் 2-வது மிகச் சிறந்த போக்குவரத்துக் கழகமாக தேர்வு செய்யப்பட்டு அதற்காக ரூபாய் 3 லட்சம் பரிசு மற்றும் கேடயம் விருதாக வழங்கப்பட்டது.

3. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர் எரிபொருள் (டீசல்) பயன்பாட்டில் 1 லிட்டருக்கு அதிக கிலோ மீட்டர் முன்னேற்ற இயக்கத்திற்காக (கிராமப்புறங்களில் 3000 பேருந்துகள் வரை இயக்கத்திற்கு) தேசிய அளவில் 2-வது சிறந்த போக்குவரத்துக் கழகமாக தேர்வு செய்யப்பட்டு அதற்காக ரூபாய் 2 லட்சம் பரிசு மற்றும் கேடயம் விருதாக வழங்கப்பட்டது.

மேற்கண்ட விருதுகளை மேலாண் இயக்குநர்கள், புது தில்லியில் 11.04.2022 அன்று இந்திய வாழ்விசை மையத்தில் (India Habitat Centre, New Delhi) நடைபெற்ற விழாவில் திரு. பங்கஜ் ஜெயின், இ.ஆ.ப., ஒன்றிய அரசுச் செயலாளர் (எரிபொருள் மற்றும் எரிவாயுத் துறை) அவர்களிடம் பெற்றுக் கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in